(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 280/2020

**Depostitions of PW- 6 Witness for**

| | |
|---|---|
| Name | திரு.கருத்தபாண்டி, சார்பு ஆய்வாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 0th day of April 2024.

Signature of Witness.

04.04.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை–

நான் தற்போது சென்னை மாநகரம் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.03.2019 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கனகராஜ் என்பவர் இன்னாசியம்மாள் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று அந்த புகார் மனுவினை தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 138/2019 பிரிவு–379 இதச வாக வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்தார். நான் அதை அன்றையதினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.30 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் பாஸ்டீன் ம ற்றும் குமார் ஆகியோர்களின்

முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். இவ்வழக்கில் சாட்சிகளான இன்னாசியம்மாள், மரியதவமணி, மேரிநிர்மலா, பாஸ்டீன், குமார் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்தநிலையில் 26.11.2019 ம் தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனராவங்கியின் அருகே நின்று கொண்டிருந்த மணிமாலா என்பவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் 10.20 மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் எதிரி மணிமாலா தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம்கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்றஎண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும், வாக்குமூலத்தின் அடிப்படையில் சிவகாசி சென்று துர்கையம்மன் கோவில் தெரு விஜயராஜ் மனைவி சண்முகலட்சுமி என்பவரிடம் இருந்து இவ்வழக்கு சொத்தான 5 1/2 பவுன் தாலியுடன் கூடிய தங்க முறுக்கு செயின் ஒன்றையும், குற்ற எண். 550/2019 வழக்கு சம்மந்தப்பட்ட மகாலட்சுமி அனுப்பன்குளம் சிவகாசி என்பவரிடம் இருந்து மணிமாலா என்பவரிடம் இருந்தும் பைனான்சில் இருந்து திருப்பி ஒப்படைக்கப்பட்ட செயினை அத்தாட்சியில் கைப்பற்றினேன் பின்பு இவ்வழக்கு சொத்தை எதிரியுடன் 15.00 மணிக்கு நிலையம் வந்து உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு எதிரியை உட்படுத்தினேன். வழக்கை சொத்தை படிவும்–91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் தமிழரசன் மற்றும் அஞ்சே ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சி இன்னாசியம்மாள் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு –379 இதச வாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். வரைபடம் அ.சா. ஆ. 6 ஆகவும், படிவம் –91 அ.சா. ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__–

நான் இந்த வழக்கை 03.03.2019 அன்று புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். புகார் மனு கொடுக்கப்பட்ட பின்பு 8 மாதங்கள் கழித்துதான் நகையை கைப்பற்றியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியை 26.11.2019 அன்று கனரா வங்கி அருகே வைத்து கைது செய்தேன். கனரா வங்கிக்கும், திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்திற்கும் சுமார் 50 அடி தூரத்திற்குள் இருக்கும். இந்த வழக்கிற்கு முன்பு எதிரியை பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் விவரம் சொல்லி எதிரியை கைது செய்தேன் என்றால் சந்தேகத்தின் அடிப்படையில் எதிரியை விசாரித்தபோது அவர் சொன்ன தகவலின் அடிப்படையில் கைது செய்தேன். கனரா வங்கி ஆட்கள் நடமாட்டம்அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியிடம் எத்தனை வழக்கு சம்மந்தப்பட்ட நகைகள் கைப்பற்றப்பட்டது என்றால் 4 வழக்குள் சம்மந்தப்பட்ட சொத்துகள் கைப்பற்றப்பட்டது. 4 வழக்கு சம்மந்தப்பட்ட நகைகளையும் எதிரி தனது மணிபர்சில் இருந்து எடுத்துக்கொடுத்தாரா என்றால் 1 வழக்கு சம்மந்தப்பட்ட நகையை மட்டும் எதிரி அந்த இடத்திலேயே மணிபர்சில் இருந்து எடுத்துக்கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட நகை எவ்வளவு என்றால் 5 1/2 பவுன் நகை ஆகும். இந்த வழக்கின் புகாரிலும் 5 1/2 பவுன் நகை என்று சொல்லப்பட்டுதான் நான் புலன் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். எதிரியை காவல் அடைப்பு செய்த அறிக்கையில் புகார்தாரர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 3 1/4 பவுன் எடையுள்ள தாலியுடன் கூடிய தங்க முறுக்கு செயின் காணாமல்போனதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் புலன் விசாரணை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் புகாரில் 5 1/2 பவுன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காவல் அடைப்பு அறிக்கையில் தவறுதலாக 3 1/4 பவுன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 3 1/4 யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதென்றால் 5 1/2 பவுன் தான் கைப்பற்றப்பட்டது. 5 1/2 பவுன் நகை எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் எதிரி கொடுத்த தகவலின் அடிப்படையில் சண்முகலட்சுமி என்பவரிடம் இருந்து

கைப்பற்றப்பட்டது. நான் மேற்படி சண்முகலட்சுமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் அவரை விசாரணை செய்தேன், ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சண்முகலட்சுமியை இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 5 1/2 பவுன் நகை முழுமையாக இருந்ததா அல்லது அறுந்த நிலையில் இருந்ததா என்றால் அறுந்தநிலையில் தான் இருந்தது. நான்கு ஒப்புதல் வாக்குமூலம் தனித்தனியாக பதிவு செய்தேனா என்றால் இல்லை. ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான தமிழரசன், ஆஞ்சே ஆகியோர் புகார்தாரருக்கு உறவினர்கள்ள ன்றால் சரியல்ல. ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்களா என்றால் அந்த விவரம் தெரியாது. அவர்கள் ஒரே சமுதாயத்தை சேர்ந்த உறவினர்கள் என்றால்சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் சுமார் ஒரு மணி நேரம் கொடுத்தார். கனரா வங்கி அருகில் வைத்துதான்வாக்குமூலம் வாங்கினேன். அப்போது அந்தஇடத்தில் ஆட்கள் கூடினார்களா என்றால் இல்லை, போய் வந்துகொண்டிருந்தார்கள். மணிபர்ஸ் கைப்பற்றப்பட்டதா என்றால் ஆமாம். 4 வழக்கு பொருட்களும் எங்கு எங்கு கைப்பற்றப்பட்டதென்றால் 1 வழக்கு சொத்து எதிரியை கைது செய்த இடத்திலேயே கைப்பற்றப்பட்டது. மற்ற 3 வழக்கு சொத்துக்கள் சிவகாசியில் கைப்பற்றப்பட்டது. இந்த 3 வழக்கு சொத்துகளும் எதிரியின் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுக்கப்பட்டதா என்றால் 2 வழக்கு சொத்துகள் மகாலட்சுமி, சண்முகலட்சுமி ஆகியோர் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுக்கப்பட்டது. மற்றொரு வழக்கு சொத்து பைனான்சில் இருந்து மகாலட்சுமி, மணிமாலா ஆகியோர் எடுத்துக்கொடுத்ததை கைப்பற்றப்பட்டது. இந்த வழக்கு சொத்து யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதென்றால் சண்முகலட்சுமி என்பவரிடம் கைப்பற்றப்பட்டது. அப்படியானால் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சண்முகலட்சுமியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. மகாலட்சுமி என்பவரை இந்த வழக்கில் சாட்சியா விசாரிக்கப்பட்டுள்ளதா என்றால் அவரை நான் விசாரித்தேன், ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான்

சொன்ன நாள்,நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த பொருட்களும் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதவு செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல.